சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திருமதி. R. விஜயகுமாரி, பி.ஏ., எம்.எல்.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 14 (lw-26 ) | நாள் | 23.04.2025 |
| பெயர் | சாமிநாதன் | தொழில் | [illegible] |
| தந்தை பெயர் | சுந்தரம் | வயது | 65 |
| ஊர் | கும்பகோணம் | தாலுக்கா | [illegible] |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் கும்பகோணம், கொத்தன் ஒத்த தெருவில் வசித்து வருகிறேன். நான் கும்பகோணம் புதுபஸ்டாண்டு அருகில் உள்ள வினோத் பிரகாஷ் என்பவருடைய கிங் சைக்கிள் ஸ்டான்டில் சுமார் ஒன்றரை வருடங்களாக டோக்கன் கொடுக்கும் வேலை பார்த்துவருகிறேன். போன வருடம் 3ம் மாதம் ஒருநாள் ஒரு வெள்ளைக்கலர் அப்பாச்சி மற்றும் நீலக்கலர் பல்சர் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை இரண்டு நபர்கள் கொண்டு வந்து நான் வேலை பார்க்கும் ஸ்டாண்டில் விட்டார்கள். வண்டியை விட்டதற்கு டோக்கன் போட்டேன். அதன்பிறகு சுமார் 15 நாட்கள் கழித்து மயிலாடுதுறை DSP போலிஸ் சகிதம் சைக்கிள் ஸ்டாண்டிற்கு வந்து மயிலாடுதுறை கேஸ் சம்பந்தமாக இரண்டு வண்டிகளை எடுக்கவேண்டும் என்று சொன்னார். நான் எனது ஓனருக்கு போன் போட்டு சொன்னேன். அவர் வண்டியை எடுத்து கொடுக்க சொன்னார் நான் இரண்டு வண்டியையும் எடுத்து போலிஸிடம் கொடுத்தேன். அவர்கள் சைக்கிள் ஸ்டாண்டின் ரோஸ் கலர் அட்டையுடன் கூடிய டோக்கன் புக் மற்றும் இரண்டு டோக்கனை கைப்பற்றினார்கள். கிங் சைக்கிள் ஸ்டாண்டிலிருந்து கைப்பற்றப்பட்ட **ரோஸ் கலர் அட்டையுடன் கூடிய டோக்கன் புக் அசாஆ. 15** ஆகும். **டோக்கன் ரசீது இரண்டு எண்ணிக்கைகள் அசாஆ 16** வரிசை ஆகும்.

[signature]

எதற்காக வண்டியை எடுக்குறீர்கள் என்று கேட்டேன். அஜித் கொலை வழக்கு சம்பந்தமாக கைப்பற்றுவதாகவும் அந்த வண்டிகள் அஜித்குமார் மற்றும் சத்யசீலனுக்கு உரிமையான வண்டி என்று சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் இரண்டு போட்டோக்களில் உள்ள வெள்ளைக்கலர் அப்பாச்சி வண்டி மற்றும் நீலக்கலர் பல்சர் வண்டிகளைத்தான் போலிசார் கிங் சைக்கிள் ஸ்டாண்டிலிருந்து கைப்பற்றினார்கள். அந்த இரண்டு போட்டோக்கள் **சாபொ 15** வரிசை ஆகும். அந்த வண்டியின் உரிமையாளரையும் போலிசார் அழைத்து வந்துதான் அந்த வண்டியை கைப்பற்றினார்கள். அவர்களை தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியாது. இது சம்பந்தமாக மயிலாடுதுறை DSP என்னை விசாரித்தார்.

## 1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை எனவே குறுக்கு விசாரணை இல்லை.

## 5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் வினோத் பிரகாஷ் என்பவரின் சைக்கிள் ஸ்டாண்டில் வேலை செய்வதற்கு அடையாள அட்டை உள்ளதா என்றால் இல்லை. அன்றன்றைக்கு கூலி தருவார். வினோத் பிரகாஷ் சைக்கிள் ஸ்டாண்ட் நடத்துவதற்கு லைசன்ஸ் வைத்திருக்கிறாரா என்றால் அது பற்றி அவருக்கு தான் தெரியும். வினோத் பிரகாஷ் என்பவர் கற்பனையானவர் என்றாலும் அவர் சைக்கிள் ஸ்டாண்டு எதுவும் வைத்து நடத்தவில்லை என்றாலும் அதில் நான் பணிபுரியவில்லை என்றாலும் சரியல்ல. நான் பணிபுரியும் சைக்கிள் ஸ்டாண்டில் சிசிடிவி கேமரா உள்ளதா என்றால் உள்ளது. போலிசார் அந்த சிசிடிவி கேமராவை பார்வையிட்டார்களா என்றால் இல்லை. சத்யசீலன், அஜித் என்ற பெயர்களை நான் போலிசார் சொல்லிதான் தெரிந்து கொண்டேன் என்றால் அதற்கு முன்பே பேப்பரில் போட்டுவிட்டார்கள் அதன்பிறகு போலிசார் சொல்லியும் தெரிந்து கொண்டேன். அந்த டோக்கனில் நான் எதாவது

S-[signature]

கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் அதுபோல் கையெழுத்து போடும் வழக்கம் இல்லை. அந்த டோக்கனை எழுதியது நான் தான். அந்த டோக்கனில் வாகன எண் எதுவும் மற்றும் வாகனத்தின் வகைப்பாடு, எத்தனை மணிக்கு வாகனத்தை போட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. யார் கொண்டு வந்து வாகனத்தை போட்டார்கள் என்ற விவரமும் இல்லை என்றால் அதை எழுத மாட்டோம். அந்த டோக்கன் காவல் துறையினாரால் தயாரிக்கப்பட்டது என்றாலும் காவல் துறையினருக்கு சாதகமாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த டோக்கன்களும் பதிவேடும் இருசக்கரவாகனங்களும் போலிசாரிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் அடையாளம் காண்பித்த சாபொ 15 வரிசையில் வண்டியின் புகைப்படங்களை போலிசார் அடையாளம் காண்பித்து அதனடிப்படையில் நீதிமன்றத்தில் முதல் முறையாக பார்த்து அடையாளம் காண்பிக்கிறேன் என்றால் சரியல்ல. சத்யசீலன், அஜித் என்ற பெயர்களையும் போலிசார் சொல்லிக்கொடுத்து முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் கைப்பற்றியதாக சொல்லும் வாகனங்களின் எண்கள் குறிப்பிடமுடியுமா என்றால் முடியாது. போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் வண்டி போட்டு சுமார் 15, 20 நாட்களில் விசாரித்தார்கள். 25.04.2024 அன்று ஓர் வலுவான சாட்சி தேவைப்பட்டதால் போலிசார் என்னை இந்த வழக்கின் சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இறந்து போன அஜித்குமாரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறந்துபோன அஜித்குமாரின் குடும்பம் எனக்கு நன்கு தெரிந்த குடும்பம் என்றாலும் அதனால் தான் போலிசார் என்னை இந்த வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் கும்பகோணத்தில் சைக்களில் ஸ்டாண்டு எதுவும் இல்லை என்றாலும் அதில் எந்த வண்டியும் எதிரிகள் போடவில்லை என்றாலும்

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**9ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஏற்கனவே விசாரித்த முக்கிய சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரப்பட்டது. இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் இரண்டு மாத காலத்திற்குள் விசாரணையை முடிக்க உத்தரவிட்டுள்ளதால் குறுக்கு விசாரணைக்கு கோரிய காலஅவகாசம் மறுக்கப்படுகிறது. அரசு தரப்பிலும் மேற்கூறிய காரணத்தால் குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் வழங்க ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது. மேற்கூறிய காரணங்களால் 9ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று பதிவு செய்யப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

23/4/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

23/4/25

சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திருமதி. R. விஜயகுமாரி, பி.ஏ., எம்.எல்.,
சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 15 (lw-28 ) | நாள் | |
| பெயர் | ரஜினி | தொழில் | Deputy Thasildhar |
| தந்தை பெயர் | L. செல்வன் | வயது | 46/25 |
| கிராமம் | கைகளாஞ்சேரி | தாலுக்கா | : சீர்காழி, |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரகத்தில் சமூக பாதுகாப்பு துறையில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024ல் நான் சீர்காழி வட்ட அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்தேன். 2024 பாராளுமன்ற தேர்தல் வந்தது. அப்போது பறக்கும்படை பிரிவு அலுவலராக பணிபுரிந்தேன். பறக்கும்படைக்கு யாராவது தேர்தல் விதிகளை மீறுகிறார்களா என்று கண்காணிப்பது தான் வேலை. 20.03.2024 அன்று அந்த பணியில் இருந்தேன். மதியம் 2.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை உள்ள second shift ல் பணிபுரிந்தேன். நாங்கள் சோழம்பேட்டை மற்றும் மாப்படுகை பகுதிகளில் வாகனசோதனை சென்று விட்டு இரவு சுமார் 9.00-9.30 மணியளவில் திருவழுந்தூர் பெருமாள் கோவில் தெற்கு வீதி அருகே வந்துகொண்டிருந்தபோது இரண்டு இரு சக்கரவாகனத்தில் இரண்டு இரண்டு பேராக வேகமாக போனார்கள். அங்கு கூட்டமாக இருந்தது. அதனால் சந்தேகப்பட்டு நான் பயணம் செய்த டவேரா வாகனத்தை டிரைவரிடம் slow செய்யும்படி சொன்னேன். வண்டி கொஞ்ச தூரம் போய்விட்டது. வண்டியை திருப்பி

[signature] 23/4/25

கொண்டு வருவதற்குள் இருசக்கரவாகனத்தில் அங்கிருந்தவர்கள் வண்டியுடன் ஓடிவிட்டார்கள். அருகே வந்து பார்த்போது ஒரு நபர் ஒரு இருசக்கரவாகனத்தின் அருகே விழுந்து கிடந்தார். அவருடைய முகம் சிதைந்து இரத்தப்போக்குடன் இறந்து போல் கிடந்தார். நாங்கன் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்க போனை எடுத்தபோது போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். போலிசார் அங்கு வந்து விசாரித்தபோது இறந்து கிடந்த நபர் கலைஞர் காலனியை சேர்ந்த அஜித்குமார் என்று தெரியவந்தது. போலிசார் விசாரித்தபோது 2022ல் கண்ணன் என்பவரை கொலை செய்துவிட்டதாகவும் அதற்கு பழிவாங்கும் விதமாக முன் விரோத்தில் இந்த கொலை நடந்ததாக தெரியவந்தது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை எனவே குறுக்கு விசாரணை இல்லை.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரி. மயிலாடுதுறை நகர காவல்நிலைய போலிசார் தான் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரி. அப்போது இரவு 9–9.30 மணியிருக்கும் என்றால் சரி. 2022ல் கண்ணன் என்பவரை கொலை செய்துவிட்டதாகவும் அதற்கு பழிவாங்கும் விதமாக முன் விரோத்தில் இந்த கொலை நடந்ததாக போலிசார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரி. அது சரியா தவறா என்று எனக்கு தெரியாது என்றால் சரி.

23/11/25

**9ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஏற்கனவே விசாரித்த முக்கிய சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரப்பட்டது. இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் இரண்டு மாத காலத்திற்குள் விசாரணையை முடிக்க உத்தரவிட்டுள்ளதால் குறுக்கு விசாரணைக்கு கோரிய காலஅவகாசம் மறுக்கப்படுகிறது. அரசு தரப்பிலும் மேற்கூறிய காரணத்தால் குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் வழங்க ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது. மேற்கூறிய காரணங்களால் 9ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று பதிவு செய்யப்படுகிறது.

23/4/25

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

23/4/25
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

23/4/25

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திருமதி. R. விஜயகுமாரி, பி.ஏ., எம்.எல்.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 16 (lw-29) | நாள் | 23.04.2025 |
| பெயர் | ராஜீ | | |
| தந்தை பெயர் | வேலு | தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| | | வயது | 55 |
| கிராமம் | திருமணஞ்சேரி. | தாலுக்கா | குத்தாலம் |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மாவட்ட குற்றப்பிரிவு II ல் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். 2024 ல் பாலையூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்தபோது பாராளுமன்ற தேர்தல் அலுவலாக சீர்காழி துணைவட்டாட்சியர் திருமதி. ரஜினி அவர்கள் தலைமையில் பறக்கும்படையில் பணிபுரிந்தேன். என்னுடன் முதல் நிலை காவலர் சதீஷ்குமார், தினேஷ்குமார் வாகன ஓட்டுநர் ஐயப்பன், கேமரா மேன் ஆகியோர் அந்த Squad ல் இருந்தோம். 20.03.2024 அன்று மதியம் 2.00 முதல் இரவு 10.00 மணி Shift ல் பணியில் இருந்தபோது சோழம்பேட்டையிலிருந்து மாப்படுகை வழியாக திருவழுந்தூர் வந்தபோது இரவு சுமார் 9.00 மணியிருக்கும். அப்போது இரண்டு இருசக்கரவாகனத்தில் இரண்டு இரண்டு பேர் எங்களை தாண்டி வேகமாக போனார்கள். அந்த இடத்தில் கூட்டமாக இருந்தது சத்தம்போட்டுக்கொண்டிருந்தார்கள். எங்களை பார்த்தவுடன் வண்டியை எடுத்துகொண்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள். வண்டியில் இருந்து இறங்கி பார்த்தபோது அங்கு ஒரு நபர் முகமெல்லாம் வெட்டுப்பட்டு

இரத்தவெள்ளத்தில் இறந்தது போல் கிடந்தார். போலிஸிற்கு தகவல் தெரிவிக்கலாம் என்று நினைத்தபோது போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். 2022ல் கொத்த தெருவை சேர்ந்த கண்ணன் என்பவர் கொலை செய்யப்பட்டதால் அதனால் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இந்த கொலை நடந்ததாக தெரியவந்தது. அங்க கொலையாகி இறந்துகிடந்தவர் லோகநாதன் மகன் அஜித்குமார் என்று தெரியவந்தது. இது சம்பந்தமாக என்னை மயிலாடுதுறை DSP விசாரித்தார்.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை எனவே குறுக்கு விசாரணை இல்லை.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் DSP விசாரித்போதும் சொன்னேன் என்றால் சரி. 2022ல் கொத்த தெருவை சேர்ந்த கண்ணன் என்பவர் கொலை செய்யப்பட்டதால் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இந்த கொலை நடந்ததாக போலிசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரியல்ல. அங்கு இறங்கி விசாரித்தபோது தெரியவந்தது. போலிசார் விசாரணையில் அந்த இடத்தில் இறங்கி விசாரித்தபோது தான் மேற்படி சங்கதி தெரியவந்தது என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அவ்வாறு கூறவில்லை என்றாலும் வழக்கிற்காக முதன்முறையாக இந்த சங்கதியை இப்போது தான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. மயிலாடுதுறை நகர காவல் நிலைய போலிசார் எத்தனை மணிக்கு அங்கு வந்தார்கள் என்றால் சுமார் இரவு சுமார் 9.00 முதல் 9.30 மணியளவில் வந்தார்கள். மயிலாடுதுறை நகர காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் அங்கு தான் இருந்தார்கள் என்றால் சரி.

**9 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஏற்கனவே விசாரித்த முக்கிய சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரப்பட்டது. இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் இரண்டு மாத காலத்திற்குள் விசாரணையை முடிக்க உத்தரவிட்டுள்ளதால் குறுக்கு விசாரணைக்கு கோரிய காலஅவகாசம் மறுக்கப்படுகிறது. அரசு தரப்பிலும் மேற்கூறிய காரணத்தால் குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் வழங்க ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது. மேற்கூறிய காரணங்களால் 9 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று பதிவு செய்யப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

23/4/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

23/4/25